<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>

<u>அசல் வழக்கு எண். 659/2019</u>

**2025–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07–ம் நாள் திங்கள் கிழமை** வாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **செல்வி. S.இவாஞ்சலின், இளநிலை உதவியாளர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :காந்தி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | :பெருமாள் | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | :உடும்பியம் | வயது | : 56/2025 |

**முதல் விசாரணை :**

1(i) நான் இவ்வழக்கில் வாதியாவேன். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்யும் ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். தாவா சொத்திற்கு எனது அப்பா பெயரிலும், பிரதிவாதியின் தந்தை பழனிமுத்து பெயரிலும் கூட்டாக வழங்கப்பட்ட உடும்பியம் கிராம மனைவரி பட்டா எண்.409–ற்குரிய சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு 09.03.2017 ம் தேதியிட்டு எனது பெயரிலும், எனது தாயார் பெயரிலும் செலுத்தப்பட்ட வீட்டுவரி ரசீதுகளின் அசல்கள்(3 எண்ணிக்கை) தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை, நில அளவையர் தாக்கல் செய்த வரைபடம் ஆகியவற்றை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். ஆணையர் அறிக்கை **நீ.ம.சா.ஆ.1** ஆகவும், நில அளவையர் தாக்கல் செய்த வரைபடம் **நீ.ம.சா.ஆ.2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன். பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக வாய்தா அளித்து ஒத்திவைக்கப்படுகிறது.